வைத்தியசந்திரிகா
July 1941

JL
L;5m2ll N25vc
N41.3.8
210198

197
OFFICE OF ... REGISTRAR OF BOOKS
4 -AUG 1941

உ

வைத்திய சந்திரிகா.

ஓர் உயர்தர தமிழ் மாதப்பத்திரிகை.
பிரதி ஆங்கிலமாதம் முதல்வாரத்தில் வெளிவரும்

Vol. 3 | July 1941. | No. 8

விஷய சூசிகை. பக்கம்

The Usman Committee Report (Editor) 1—3
Resolutions on the Usman Committee Report (Swadesa Vaidya Sabha Madura) 3
Some thoughts on Indian Medicine (N. R. Krishnasamy Iyengar B. A., B. L.) 4—10
மதுரை, சுதேச வைத்திய சபையின் தீர்மானங்கள் 10
இரண்டாவது உஸ்மான் கமிட்டி (பத்திராதிபர்) 1—8
பலவகை (பண்டிட் நாராயணய்யங்கார்) 9—16
திருச்சி ஆயுர்வேத சபா (காரியதரிசி) 17
மதுரை சுதேச வைத்ய சபா (காரியதரிசி) 17

சந்தா விகிதம்.	விளம்பர விகிதம்.
வருஷ சந்தா:—	மாதம் 1-க்கு பக்கம் 1-க்கு ரூ 8
உள் நாட்டுக்கு ரூ. 2	,, ,, ½-க்கு ரூ 4
வெளிநாட்டுக்கு ரூ. 3	,, ,, ¼-க்கு ரூ 2

கிடைக்குமிடம்:—

Pandit, S. NARAYANA IYENGAR.
Editor and Publisher
No. 2, Police Station West Lane, Madura.

வெங்கடேஸ்வர் பிரஸ், மதுரை:—41.

[விலை 0—3—0

JL
L:5m21/H2NC
N41.3.8
2/10/98

டி. ஐ. ஸி, கார்பரேஷன்,

62, காக்காத்தோப்புத்தெரு,

மதுரை.

ஸோல் ஏஜன்ட்ஸ்

ஆயுர்வேதிக் காம்பவுண்ட் டிஞ்சர்ஸ் லிமிடெட்.
திருவனந்தபுரம்.

நீங்கள் வெகுகாலமாக எதிர்பார்த்திருந்த எங்களுடைய கேட்லாக்குகள், டிஞ்சர்கள் இப்போது தயார்.

விபரத்துக்கு மேல்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

ஸஹஸ்ரயோகம்.

இது மலையாள தேசத்தில் பிரசித்தமான ஓர் வடமொழி வைத்ய நூலின் தமிழ் மொழி பெயர்ப்பு. இந்நூலை யனுசரித்தே மலையாளத்தில் மருந்து முறைகள் தயாரிக்கப்படுகின்றன. இந்நூலில் கஷாய முறைகள் 184, கிருதமுறைகள் 70, தைலமுறைகள் 85, சூர்ண முறைகள் 89, லேகியமுறைகள் 20, குளிகைமுறைகள் 73, ஜன்னிமருந்துகள் 75, கண்ணோய்களுக்கு மருந்துகள் 92, காதுநோய்களுக்கு மருந்துகள் 6, மூக்குநோய்களுக்கு மருந்துகள் 6, முகரோக மருந்துகள் 3, தொண்டை நோய்களுக்கு மருந்துகள் 6, உள்வாய் ரோகங்களுக்கு மருந்துகள் 5, பலவகை மருந்துகள் 153 ஆக இவ்விதம் மொத்தம் 867 மருந்துகள் வியக்தமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. இந்த ஒரு நூலே வைத்யர்களுடைய தேவைக்குப் போதுமானது. புத்தகம் விலை ரூ. 1 தபால் கூலி வேறு.

கிடைக்குமிடம்—பண்டிட் நாராயணய்யங்கார்
நெ. 2, போலீஸ் ஸ்டேஷன் மேற்கு சந்து மதுரை.

4 - AUG 1941 ... RAS

The Usman Committee Report.

The Government of Madras issued a communique on 21st of June 1941 on the recommendations made by the Committee presided over by Sir Muhammad Usman appointed to enquire into the curriculam of studies in the school of Indian Medicine The Government in the said communique is inclined to think that some of the proposals of the committee tend to suggest doubts about the practicability of a combination of modern medicine with the study of Ayurvedic, Sidha and Unani methods and also that the combination is likely to create confusion in the minds of students; and the Government has cited the opinion of Lieutenant Colonel (now Colonel Sir) R. N. Chopra of Calcutta. We are of opinion that there can be absolutely no difficulty a student studying or practicing both systems of medicine and that the Government is labouring under some misapprehension about what is meant when we talk of studying or practising both systems together. We know of many instances in Calcutta and other places where eminent Doctors proficient in both systems of medicine, employ both of them in their treatment of cases. We need in this connection only cite the following opinion expressed by Dr. S R. M. Naidu, D. Sc. M. D. M S G. Med etc, Hyderabad, Decan. "The Ayurvedic and Unani systems flourish side by side with the more recent systems of Allopathy, Homoepathy, and Bio-Chemistry. All these systems are individually good but are not sufficient to meet the growing demands of suffering humanity. As mentioned above no one system is complete in itself and therefore the writer wishes to put forward a strong plea for the unification of all

210198

the systems that exist. The pioneers of this theory of unification in India were those stalwart national patriots—the late Hakim Ajmal Khan, one of the greatest exponents of Unani medicine, and the late Dr. M. A. Ansari M. D. M S, the most brilliant product of the western system of medicine. The long association of these leaders resulted in the establishment of the "Tibia College" at Delhi. In this college students have to undergo a combined course which gives them a good and workable knowledge of both the allopathic and unani systems. The results of this experiment proved highly satisfactory as the students that emerged from this college were better equipped with medical knowledge than graduates of an allopathic college and those that exclusively use the Unani method of treatment." The difficulties mentioned in the Government communique seem to us more imaginary than real. There must be schools imparting education in the Swadeshi systems of medicine just like the Medical colleges in which the Allopathic system is now being taught. The students admitted in these schools should have a fair grounding in the languages in which the works of Swadeshi medicine are extant Such instruction should be supplemented by a course in such subjects as Surgery and midwifery, of which the theory is dealt with in the books of swadeshi medicine but which are not being actually practised at the present day by the followers of that system. Easy text books on such subjects taught by followers of the Allopathic system would considerably help the students to understand both the theory and practice of both systems. The curricula of studies prescribed for the

Vaidya Siromani course of the Madras University should be followed as is being done in so many Ayurvedic schools. We fervently hope that the Government will make earnest efforts to make the school of Indian Medicines an institution of real utility and lasting benefit to the suffering public of this Presidency by adopting the above suggestions.

In the meeting of the Native doctors held under the auspices of the Sudesa Vaidya sabha, Madura under the presidency of Sri V. Swaminatha Iyer, Ayurvedic Doctor, on 20th July 1941, at Madura, the following resolutions were passed:—

1. The members of the Sudesa Vaidya Sabha Madura affirm their belief in the efficiency of the indigenous systems of medicine and in view of the widespread resort by the people to the same, earnestly request the Government of Madras to take all effective measures to strengthen the school of Indlan Medicine, Madras and place it in a suitable and permanent basis.

2. This meeting is further of opinion that in order to help students passing out of the Indian school of Medicines, Madras for practising the indigenous systems, more effective instruction in the said school should be imparted mainly in medical Indian Medical works and also that instruction may be imparted in the said school of Medicines with refrence to Allopathic treatises on such subjects as surgery and Midwifery, the theory and practice of which are dealt with in Indian works but which are not now much in vogue.

3. This meeting hereby authorises the Chairman to communicate the above resolutions to authorities concerned.

Some thoughts on Indian Medicine.

1. Much of havoc that has been wrought on Indian Society is due to the misled English Educated section of Indian Society who have become essentially un-Indian in every day life and habits, thought, word and deed partly owing to their ignorance of the holy traditions of the time honoured walks of life, habits and faith of their own fore-fathers and partly considering it a fashion to be imitating the ways of the West as the ideals of life and living especially when the best and the most cultured men of thought and experience in the West have been condemning the institutions of the West relating to social and individual life as not contributing to the moral, physical or economical welfare of the individual or society as a whole and at the same time hold up as ideals and examples, the ways of life and living of society and individual of the Hindu Race.

2. Taking the science of medicine and its practice the antiquity of the Sanskrit and Tamil systems of medicine is as undiscoverable as the civilisation of the Hindus. The science of Medicine is looked upon by the Sanskritists at a par with the Vedas, the system itself is called an Upa Veda thus being placed above the cadre of the other Purusharthas contributing to the welfare of man, namely the sastras dealing with Dharma, Artha, Kama, and Moksha. So also the Tamilian physicians and their profession have been held in the highest respect and regarding its antiquity we find many a reference in the ancient Sangha works to systems of Medicine and treatment and Maruthuva

Damodaranar, a physician by calling has been one of 48 principal pandits of the third Sangam and his prescription for headache is still part of Tamil poetry. These systems have had both their Medicinal and Surgical departments equally well developed both in theory and in practice.

3. The continued sustenence of interest in the science of Medicine is evidenced by standard authors flourishing age after age leaving permanent records of their systems in all their particularities of diagnosis, medication, the advantages of diet and feeding with Medicated foods not to speak of any number of other varieties of detail in the care of the bodies of those entrusted with them

4. Health is the thing for which the Doctor stands, disease is but an accident. All the books on medicine in this country have always been enjoining upon the Doctor to be a Doctor of health of all people who resort to him and the state of illness, the subject of their care is but an extraordinary and occasional existence for which adequate treatment is provided. Amongst the Mongolian race Health Doctors thrive and flourish in large numbers in cities and villages and Doctors of disease are few and even starved without patients for treatment. That is the ideal of Indian Medicine borrowed by the Buddist section of its admirers.

5. The science of medicine has three aspects, (1) the material of which the human body with which it

concerns is made (2) its constitution as a whole namely, the parts of the human body and their functioning individually and of their interdependance and (3) the diseases affecting one or the other and the effect there of upon the system as a whole. These three departments of medical knowledge have been most carefully and scientifically investigated upon the standard works exist both in Sanskrit and Tamil upon them of the accuracy and usefulness of which the modern works on anatomy and nervous system cannot easily challenge or question. The one thing peculiar to the Sanskrit and Tamil systems of medicine is the consciousness of the physical and the material body and every one of its organs being run and actuated by the soundness of the vitality of the life within about which the English system of medicine is yet to hear. The English medicine treats of the human body just as that of a doll. It never takes into "life" because it knows none. Therefore operations are often successful but patients expire on the table. Why? Because the holder of the knife has no consciousness of life. Some feeble thoughts are heard on vitamins. They are re-echoed from place to place. Artificial life is sought to be substituted for natural life. The vegitable life is sought to be substituted in the animal life. Operations of glands and incorporations of monkey glands into human body are attempted for making monkeys of men although the reverse would be as the better functioning of the Doctor. That such an imperfect system should be shameless to compete with the most perfectly scientific system of Indian Medicine is but the result of the 'Occidento Phobia' madness of

goodness of things of the west arising partly out of ignorance of the English Educated Indian physicians andsurgeons, of the perfection and beneficience of their own indigenous systems of medicine, and partly their admiration for their own little knowledge. It is not 1½ decades ago when the system of treatment by dechlorinisation was inaugurated in the General hospital of Lahore, when the Principal of Ayurvedic College of that place laughed at the whole thing and said that this is a system which is known to our village physician for 10s if not hundreds of centuries as one which makes medicines take more effect and gives speedier cure and to inaugurate it as a great invention and discovery of the West to-day is a thing not to be proud of.

6. To the English-man every thing is a trade not excluding religion, politics and Medicine. It is but recently that the Accountant General of the United States of America called phylanthropy, the 8th greatest trade in the United States of America because for charitable and phylanthrophical institutions there was a total income of 200 millions of Dollars during the year under account with almost an equal expenditure showing how rapidly philanthrophy has developed into a trade. That the westerner introduced his system of medicine into this country as part of his love for trade and the profit he gets there from is no wonder because he is a business man. The blind folded Indian may help the trader for his own profit and individual betterment is equally worthy of the licker. But to condemn the ancient system of medicine with its hoary traditions preserving and perpetuating the health of

a whole nation, rising in its population by great percentages in every decade is impudence and impertinence of an inexcusable type.

I challenge every man who has the grit to condemn any system of Indian medicine to come by himself or along with or in a whole college of western physicians to stand the searching cross-examination of one of my Tamil or Sanskrit Pandits in the Medical literature and correctly answer to the extent of getting 30 percent of marks in all the papers set by them regarding Indian Medicine, disease and their treatments. Why Bluff when you are empty and blame when you are ignorant? Sins can become to some extent and not when they grow to an adacious height of impertinence and impudence so as to condemn things really good, for the purpose of saving the one and seeking or advancement of what is by common consent and recognisedly bad.

You must omit the half educated apers of English ways and enter into the home of every honest Indian living in a town or village, ask him what is his opinion about the Indian System of Medicine compared to that of the English. He will immediately confess to you that all ills in his home have been cured only by Indigenous physicians and what all money he spent on English Medicine is a reckless waste.

But I have an equal duty to discharge towards the practitioners of the Indian Medicine. I would earnestly request you to have that capacity for United action which the Medical tradesmen of the west have. You

must take care to produce the best medicines by the best men of experience from whom all must purchase. You must respect higher and better capacity in diagnosis and treatment and whenever you feel difficult you must call in the services of Medical men of better knowledge and larger experience or both. Without fear or favour you must lay bare all cases of wrong treatment by the English system and try to show inefficacy of the system rather than any person practising it.

I draw your special attention to the inefficacy of the system for this reason. Health, its maintenance, developments of disease and their cure are all matters varying with the climatic conditions in which the people live, the food to which they are accustomed and their habits of life that act upon them. Now the English system of medicine is one conceived and developed for the people of England from whom in the above details the people of India are poles a part.

Has the Government attempted census of the sick of the country for any year? The percentage that received treatment under the English system of medicine and the percentage that was cured thereby and equally that of the percentage of the sick who got treatment at the hands of Indian physicians and the percentage who got cured? By common arrangement, the practitioners of the Indian system in every village, taluk or district must keep registers of patients receiving treatment under them, they should be preserved and the same may be compared with the registers kept in English hospitals and dispensaries and

the percentages of cure both in major and minor diseases by the Indian system of medicine being several times more than those coming under the English system must be demonstrated. We must at the same time think of the hundreds of thousands of rupees that are spent, upon the western system being perpetuated in this country and the stepmotherly affection towards Indian medicine.

United action, statistics and constant agitation open challenge and the showing of the Indian Medical practitioners of the western system their right place are the only means of salvation for the indigenous medical practitioners.

God help them to reach their own place of Importance and Beneficience of the Indian Nation as a whole by their constant action, continued effort and grit.

N. R. KRISHNASAMY AYENGAR, B.A., B.L.

26—5—41.

மதுரை சுதேச வைத்திய சபையின் தீர்மானங்கள்.

1. சுதேச வைத்தியத்தில் பொதுஜனங்களுக்கு நம்பிக்கையிருப்பதுடன் பெரும்பான்மையான ஜனங்கள் சுதேச வைத்தியப்படி சிகிச்சை பெற்று வருவதால் சென்னை இந்தியன் மெடிகல் ஸ்கூலை எக்காரணம் கொண்டும் பலஹீனப்படுத்தக்கூடாதென சபையார் அரசாங்கத்தாரை வேண்டுகிறார்கள். (2) ஷை ஸ்கூலில் தேறி வெளிவரும் மாணாக்கர்கள் சுதேசி மருந்துகளையே கையாளும்படி செய்ய ஷை ஸ்கூலில் சுதேசி பாடங்களை போதிக்கவேண்டுமென்றும் சுதேச நூல்களில் theory அளவில் இருப்பதாயும் ஆனால் practice இல்லாமல் கைவிடப்பட்ட surgery, midwifery, பாடங்களை ஆங்கில முறை போல் போதிக்க வேண்டுமென அபிப்பிராயப்படுகிறார்கள். (3) சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு இத்தீர்மானங்களின் நகலை அனுப்பும்படி தலைவருக்கு அதிகாரம் அளிக்கின்றார்கள்.

காரியதரிசி.

இரண்டாவது உஸ்மான் கமிட்டி.

சென்னை இந்தியன் மெடிகல் ஸ்கூல் விஷயமாக நியமிக்கப்பட்ட இரண்டாவது உஸ்மான் கமிட்டி செய்துள்ள சிபார்சுகளைப் பரிசிலனை செய்து சென்னை அரசாங்கத்தார் சென்ற மாதத்தில் வெளியிட்ட அறிக்கையை சென்ற சந்திரிகையில் பிரசுரித்தோம். அவ்வறிக்கையில் காணப்படும் முக்கிய விஷயங்களாவன—(1) சுதேச முறைகளும் ஆங்கில முறைகளும் ஒன்று சேர்த்து போதிப்பதால் மாணாக்கர்களுக்கு கலவரம் உண்டுபண்ணுமாதலால் இருமுறைகளும் ஒன்று சேராது. (2) கல்கத்தா டாக்டர் R. N. சோப்ரா அவர்கள் இவ்விஷயத்தில் தெரிவித்துள்ள அபிப்பிராயம். (3) சென்னை இந்தியன் மெடிகல் ஸ்கூலில் பயிற்சி பெற்ற இரு மாணாக்கர்கள் கோஷா ஆஸ்பத்திரியில் அளித்துள்ள பொருத்தமற்ற விடைகள். (4) இரு முறைகளிலுள்ள சில பாடங்களை ஒன்று சேர்த்து போதிக்க வேண்டுமென்ற சிபார்சுகளில் அதற்குத் தகுந்த வழியை கமிட்டியார் சொல்லாமல் இருத்தல். இந்த நான்கு விஷயங்கள் சர்க்கார் அறிக்கையில் காணப்படுகின்றன. இந்த நான்கும் சாரமற்றவை. இரு முறைகளைச் சேர்த்து போதிப்பதால் கலவரம் உண்டாகுமென்பது சுத்த அசம்பாவிதம். இரு முறைகளிலுள்ள தத்வங்களை ஒரு மாணாக்கன் அறிந்து கொள்ளுவதால் மிகுந்த நன்மையே விளையும் தனித்தனி பாடங்களில் இது இந்தியக் கொள்கை. இது ஆங்கிலக் கொள்கை என்று பிரித்துத் தெரிந்து கொள்ளுவதால் இரு கொள்கைகளையும் அவன் அறிந்து கொள்ளவும் ஒரு முறைப்படி சிகிச்சை செய்து பயன் கிடைக்காவிட்டால் உடனே மற்றொரு முறைப்படி சிகிச்சை செய்ய வசதியும் உண்டாகின்றது. உதாரணமாக அதிசாரத்தை (diarrhoea) எடுத்துக்கொள்ளுவோம். ஆங்கில முறைப்படி அதன் காரணத்தை யறிந்து கொண்டு பிறகு பிஸ்மத் (Bismuth) கலந்த மருந்தைக் கொடுத்துப் பார்த்து அதில் பயன் கிடைக்காவிட்டால் அந்த சிகிச்சையை நிறுத்தி சுதேச முறைப்படி அதன் காரணத்தை யறிந்து பிறகு குடஜாரிஷ்டம் கொடுப்பதாக வைத்துக்கொள்ளுவோம். இதில் தடுமாற்றம் என்னவென்பதும் இரு முறைகளும் பொருந்தாமல் போகுமென்பதும் எவ்விதம் சொல்லக்கூடும். ஒருவன் கிறுஸ்து மதக்கொள்கையையும் அதோடு முரண்பட்ட இந்து மதக்கொள்கையையும் தெரிந்து

கொள்வது அசாத்தியமென நினைப்பது சரியல்ல. அலோபதியும் ஹோமியோபதியும் முரண்பட்ட கொள்கைகளை யுடையவை. இவ்விரண்டையும் ஒருவர் அப்பியசித்தால் அதில் தடுமாற்றம் என்ன? மதுரையில் சில காலங்களுக்கு முன் D. M. O. ஆக இருந்த ஒருவர் சர்க்கார் ஆஸ்பத்திரியில் ஆங்கில மருந்துகளையும் பிரைவேட் பிராக்டிசில் ஹோமியோ மருந்துகளையும் உபயோகித்து வந்தது நமக்குத் தெரியும். இதில் யாதொரு தடுமாற்றத்தையும் காணோம். தவிர தற்காலம் பல ஆங்கில வைத்தியர்கள் சுதேச மருந்துகளை கம்பெனியிலிருந்து விலைக்கு வாங்கி உபயோகித்து வருகின்றனர். அவ்விதமே சுதேச வைத்தியர்களும் பல ஆங்கில மருந்துகளைக் கையாண்டு வருகின்றனர். மற்றொரு முறைமருந்துகளைக் கையாளும் பொழுது அதில் பூர்ண பயிற்சி பெற்றிருத்தல் போற்றத்தக்கதே. டாக்டர் R. N. சோப்ரா அவர்கள் கொண்டுள்ள அபிப்பிராயத்திற்குத் தகுந்த காரணம் சொல்லப்படவில்லை. இரு முறைகளையும் ஒன்று சேர்த்து விடவேண்டுமென்று யாரும் விரும்பவில்லை. இரு முறைகளையும் ஒருவன் கற்றுக்கொள்ளுவதும் அந்த அறிவை பயன் படுத்துவதும் எவ்விதம் அசாத்தியமாகும். கல்கத்தா போன்ற நகரங்களில் பலர் இரு முறைகளிலும் பயிற்சி பெற்று வைத்தியத் தொழிலை மிகச்சிறப்பாக நடத்திவருகின்றனர் டாக்டர் கணநாத்சேன் அவர்களை உதாஹரணமாகச் சொல்லலாம். இவ்விதம் பலர் இருப்பது டாக்டர் சோப்ரா அவர்களுக்குந் தெரிந்ததே. ஹைதராபாத்தைச் சேர்ந்த Dr. S. R. M. Naidu, D. Sc M. D. M S. G Med. Etc., அவர்கள் சொல்லுவதாவது—"The Ayurvedic and Unani systems flourish side by side with the more recent systems of Allopathy, Homoeopathy, and Bio-Chemistry. All these systems are individually good but are not sufficient to meet the growing demands of suffering humanity. As mentioned above no one system is complete in itself and therefore the writer wishes to put forward a strong plea for the unification of all the systems that exist. The pioneers of this

theory of unification in India were those stalwart national patriots-the late Hakim Ajmal Khan, one of the greatest exponents of Unani medicine, and the late Dr. M. A. Ansari M. D. M. S-.the most brilliant product of the western system of medicine. The long association of these eminent leaders resulted in the establishment of the "Tibia College" at Delhi. In this college students have to undergo a combined course which gives them a good and workable knowledge of both the allopathic and unani systems. *The results of this experiments proved highly satisfactory* as the students that emerged from this college were better equipped with medical knowledge than graduates of an allopathic college and those that exclusively use the Unani method of treatment." இதன் பொருள்—ஆயுர்வேத யூநானி முறைகள் மிகவும் நவீனமான அலோபதி, ஹோமியோபதி, பையோ கெமிஸ்ட்ரி ஆகிய முறைகளுடன் சேர்ந்து இந்தியாவில் வளர்ந்து வருகின்றன. இந்த (ஐந்து) முறைகளும் தனித்தனியாக நல்ல முறைகளே. ஆனால் நோய் வாய்ப்பட்டு வருந்தும் பிணியாளிகளின் தேவைக்கு இவைகள் தனித்தனியாகப் போதுமானவைகள் அல்ல. கீழ் சொன்ன முறைகளில் எதுவும் தனித்தனியாகப் பூர்ணமானவை யல்ல. ஆகவே இவைகளை ஒன்று சேர்க்க வேண்டுவது அவசியமென்று அழுத்தமாகச் சொல்லுவேன் இவைகளனைத்தையும் ஒன்று சேர்க்க வேண்டுமென்ற கொள்கையை இந்தியாவில் ஆரம்பித்தவர்கள் யாரெனில் தேசிய வாதிகளுள் முதன்மையானவர்களான ஹக்கீம் அஜ்மல்கான் அவர்களும் டாக்டர் M. A. அன்சாரி அவர்களுமே. ஹக்கீம் அஜ்மல்கான் அவர்கள் யூனானி முறைகளில் மிக நிபுணரென்பதும் டாக்டர் அன்சாரி அவர்கள் ஆங்கில முறைகளில் நிபுணரென்பதும் பிரசித்தமே. இவ்விரு தேசாபிமானிகளின் கூட்டுறவால் டில்லியில் "திபியா காலேஜ்" ஒன்று நிறுவப்பட்டது. இக்காலேஜில் மாணாக்கர்களுக்கு ஆங்கில முறை, யூனானி முறை ஆக இரண்டிலும் கூட்டுப்பயிற்சி யளிக்கப்படுவதால்

இவ்விரண்டு முறைகளிலும் இவர்களுக்குப் போதுமான கியானம் உண்டாகின்றது. இக்கூட்டுப்பயிற்சி சோதனைமிகவும்திருப்திகரமான பலனை யளிப்பதாக அனுபவத்தில் அறியப்பட்டது. இக்காலேஜில் தேறிவரும் மாணாக்கர்களுக்கு ஆங்கில காலேஜில் தேறிவரும் மாணாக்கர்களைக் காட்டிலும் தனியாக யூனானி முறையைக் கற்று வரும் மாணாக்கர்களைக் காட்டிலும் வைத்திய அறிவு மிகுந்து இருக்கின்றது.

ஆகவே முரண்பட்ட கொள்கைகளையுடைய இரு முறைகளை ஒருவர் படிப்பது அனுஷ்டான சாத்தியமல்லவென்பது வெறும் வாதமாகும். முற்றிலும் மாறுபட்ட இரு பாஷைகள், இரு மதங்கள் முதலியவைகளை ஒருவர் தெரிந்து கொள்ளுவது போலவே சுதேச முறைகளையும் ஆங்கில முறைகளையும் ஒருவர் அறிந்து கொள்ளுவதுடன் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு உபயோகிக்கவும்கூடும். Puerperal fever, Septic abortion, இவைகளைப்பற்றி மாணாக்கர்கள் அளித்த விடைகளைக் கொண்டே ஓர் முறையின் அந்தஸ்தை நிர்ணயிப்பதாகில் ஆங்கில காலேஜுகளிலும் பல மாணாக்கர்கள் பரீக்ஷை காலங்களில் அளிக்கும் பொருத்தமற்ற விடைகளைக் கொண்டு முன் சொன்ன முடிவுக்கு வர நேரிடும். ஆங்கில காலேஜுகளிலும் எல்லா மாணாக்கர்களும் வருஷாவருஷம் பரீக்ஷையில் தேறி விடுவதில்லை. தேறாமல் தங்கி விடுவதற்குக் காரணம் பொருத்தமற்ற விடைகளே. இந்தியன் மெடிகல் ஸ்கூலில் இருக்கும் மாணாக்கர்கள் அனைவரும் அதே விடைகளை யளித்திருந்தால் சர்க்காருடைய ஊகம் பொருத்தமுள்ளதாகும். ஒரு சிலருடைய தவறுதல்களைக் கொண்டு ஓர் முடிவுக்கு வருவது மிகவும் அனுசிதம். வியாதிகள் அனைவற்றிற்கும் திரிதோஷங்களைக் காரணமெனச் சொல்லுவதுடன் அந்தந்த வியாதிகளுக்குரிய ஸம்பிராப்திகளையும் சுதேச நூல்கள் கூறுகின்றன. ஸம்பிராப்திகளைப் பூர்ணமாகத் தெரிந்து கொண்ட சுதேச வைத்தியர்கள் இது போன்றகேள்விகளில் கலக்க முறக்காரணமில்லை கமிட்டி செய்துள்ள சிபார்சுகளை அனுஷ்டானத்திற்கு எவ்விதம் கொண்டு வருவது என்பதற்குத் தகுந்த வழிகளைச் சொல்லவில்லை என்பது மற்றொரு கூற்று. தனித்

தனி இரண்டு பாடங்களைச் சொல்லிக்கொடுக்க வேண்டுமென்று சொல்லுவதைத் தவிரத் தனியாக ஒரு வழி சொல்ல வேண்டுமென்பது அவசியமில்லை. சென்னை இந்திய வைத்திய பாடசாலையில் இரு முறைகளையும் சேர்த்துக் கற்பிப்பதில் மாணாக்கர்களுக்கு யாதொரு தடுமாற்றமும் உண்டாக நியாயமில்லை யென்பதை நாம் பலமாக வற்புறுத்திய போதிலும் அதிலுள்ள சில கஷ்டங்களையும் நாம் அறியாமல் இல்லை. மாணாக்கர்களுக்கு சுதேச நூல்கள் அமைந்துள்ள பாஷைகளில் பூர்ண பாண்டித்யம் இருக்கவேண்டியது மிக அவசியம். அதே மாணாக்கர்களுக்கு ஆங்கிலத்திலும் நல்ல கியானம் இருந்தாலல்லது இரு முறைகளையும் சேர்த்துக் கற்பதென்பது அசாத்தியமாகும். இரு பாஷைகளிலும் பரிசயம் பெற்ற மாணாக்கர்கள் கிடைப்பது கடினம் என்ற பிரச்னை எழுகின்றது. ஆங்கில வைத்ய காலேஜுகளில் M. B. B.S.L.M.P. போன்ற பரீக்ஷைகளுக்குரிய பாடபுஸ்தகங்களை இந்தியன் மெடிகல் ஸ்கூலில் கற்பிக்கவேண்டுமென்று பொதுஜனங்களில் யாரும் நினைத்ததில்லை. ஷை ஸ்கூலின் பிராஸ்பெக்டஸில் காணப்படும் "a good working knowledge in the modern medicine" என்ற பாகமும் சுதேச வைத்தியத்திற்கு உபகாரமாகும்படி ஓரளவு ஆங்கில வைத்யக் கல்வியும் போதிக்கப்பட வேண்டுமென்பது தான் பொருள் எனப் பொதுஜனங்கள் நம்பியிருந்தனர். ஷை வாக்யத்திற்கு M. B. B S. மாணாக்கர்களுடைய கியானம் என்பது பொருளாகாது. உதாஹரணமாக "தசமூலஸிரா ஹ்ருத்ஸ்தா: தாஸ்ஸர்வம் ஸர்வதோவபு: | ரஸாத்மகம்வஹந்த்யோஜ: | வ்யானேந ரஸதாதுர்ஹி விக்ஷேபோசித கர்மணா | யுகபத் ஸர்வதோஜஸ்ரம் தேஹேவிக்ஷிப்யதே ததா | ஹ்ருதயம் புந: ச்லேஷ்மரக்தப் ரஸாதாத் ஸம்பவதி மாம்ஸபேசிமயம்ச பத்மகோசப்ரதிகாசம் ஸுஷிரம் அதோமுகம் |" இதன் பொருள்—ஹ்ருதயத்திலிருந்து பெரிய பத்து ரக்தக்குழாய்கள் ரஸதாதுவை (ரக்தத்தை) சரீரமுழுவதும் வியாபிக்கும்படி செய்கின்றன. ஹ்ருதயத்திலிருந்து குழாய்கள் மூலம் ரக்தம் செலுத்தப்படுவதற்குக் காரணம் வியானம் என்ற வாயு. ஹ்ருதயம் இடைவிடாமலும் ஒரே காலத்திலும் சரீரத்தின்

காலு பக்கத்திலும் ரஸத்தைச் செலுத்துகின்றது. ஹிருதயம் கபம், ரக்தம் இவைகளின் தெளிவால் உண்டாகின்றது. இது மாமிச மயமானது. தாமரைமொக்கு போல குவிந்த வடிவமுள்ளது. இதன் உள்பாகத்தில் ஓட்டை இருக்கிறது. இதன் முகம் கீழ் நோக்கியுள்ளது. "பீத்வா விஷ்ணுபதாமிருதம்" இதன் பொருள்—சுவாசாயத்திலிருந்து மூச்சுக்காற்று ரக்தத்திலுள்ள அசுத்தங்களை வெளிப்படுத்தி வெளி ஆகாயத்திலுள்ள அமிருதத்தைக் (oxygen) குடித்து ரக்தத்தில் சேர்க்கின்றது. "அதோ முகோபி பஸ்திர்ஹி மூத்ரவாஹிஸிரா முகை: | பார்ச்வேப்ய: பூர்யதே ஸூக்ஷ்மைஸ்யந்தமானை ரநாரதம் |" இதன் பொருள்—பஸ்தி என்ற அவயவம் (bladder) தலை குனிந்துள்ளது. மூத்ரக்குண்டிக்காய் (kidney) களிலுள்ள ஸூக்ஷ்மமான அதாவது மிகவும் மெல்லிய சிறு குழாய்கள் சொட்டு சொட்டாக மூத்திரத்தைச் சேகரித்து பஸ்தியின் இரண்டு அள்ளைப் பக்கங்களிலுள்ள இரு குழாய்கள் மூலம் பஸ்திக்குச் செலுத்துகின்றன.

இது போன்ற வசனங்கள் ஓரளவு உள் உறுப்புகளின் அமைப்புகளையும் தொழில்களையும் விளக்கிய போதிலும் இவற்றின் விஸ்தாரமான மற்ற அம்சங்களும் தெரிவதற்கு நவீந தேகதத்துவ சாஸ்திரம் மிகவும் உபகாரமாக இருப்பதால் அந்தவளவு அதையும் சேர்த்து கற்பிக்கலாமென்பது பொருத்தமுள்ளதாகும். சுதேச நூல்களில் சஸ்திரசிகித்சையும் அதன் உபகரணங்களும் காணப்பட்ட போதிலும் அவைகள் பழக்கத்தில் வராமல் போன காரணம் பற்றி அவைகளையும் ஆங்கிலம் கற்றவர்கள் மூலம் தெரிந்துகொள்ள வேண்டியிருப்பதால் நவீன சஸ்திரசிகித்சையைப் பாடசாலைப் பாடமுறைகளில் புகுத்தும்படி கமிட்டி செய்துள்ள சிபார்சும் பொருத்தமுள்ளதே. சஸ்திரசிகித்சையில் இரு கொள்கைகளுக்கும் யாதொரு முரண்பாடும் இருக்கமுடியாது. "ஸூதிகாலே விபன்னாயா: குக்ஷி: ப்ரஸ்பந்ததே யதி | பாடயித்வோத்தரேத் சிசும்." இதன் பொருள்—பிரஸவ காலத்தில் எந்த காரணத்தினாலாவது தாயார் மரணமடைந்தால் அவள் வயிற்றிலிருக்கும் சிசு உயிருடன் இருப்பதற்கு அடையாளமாக அவள் வயிற்றில் சிசுவின் சேஷ்டைகள் காணப்படு

மாகில் வயிற்றைக் கீறி சிசுவை வெளியில் எடுக்கவேண்டும். "காத்ரம் ச விஷமம் ஸ்திதம் | ஆஞ்சநோத்பீட ஸம்பீட விக்ஷேபோத்க்ஷேபணாதிபி: | அநுலோம்ய ஸமாகர்ஷேத் யோநிம் ப்ரத்யார்ஜவாகதம் |" இதன் பொருள்—வயிற்றிலிருக்கும் சிசு ஒழுங்கான நேர் முறையில் வெளி வராமல் கோணலாக பட்டுக்கொள்ளுமாகில் அப்பொழுது ஆஞ்சனம், உத்பீடம், ஸம்பீடம், விக்ஷேபம், உத்க்ஷேபம், இவை முதலிய ஹஸ்த லாகவத்தால் சிசுவை வயிற்றில் நேர் படுத்தி வெளியில் கொண்டு வரவேண்டும். "ஹஸ்தபாத சிரோபிர்யோ யோநிம் புக்ந: ப்ரபத்யதே | பாதேந யோநிம் ஏகேந புக்னேங்கேந குதம்சய: | விஷ்கம்பௌ நாம தௌ மூடௌ சஸ்த்ரதாரண மர்ஹத: |" பிரஸவ காலத்தில் வயிற்றிலுள்ள சிசு ஒழுங்கான முறையில் வெளி வராமல் கைகளாலும் கால்களாலும் தலையாலும் குறுக்காக யோநித்துவாரத்தில் பட்டுக்கொண்டாலும் அல்லது ஒரு கால் யோனித்துவாரத்திலும் மற்றொரு கால் குதபாகத்தில் பட்டுக்கொண்டாலும் அப்பொழுது சஸ்திரத்தால் சிசுவைத் துண்டித்து வெளிப்படுத்த வேண்டும்." "மண்டலாங்குலி சஸ்த்ராப்யாம் தத்ரகர்ம ப்ரசஸ்யதே | விருத்திபத்ரம் ஹி தீக்ஷ்ணாக்ரம் நயோநாவவசாரயேத்:" இதன் பொருள்—மண்டலம் அங்குலிசஸ்திரம், என்ற இரண்டு கத்திகளுள் ஒன்றால் கீறி சிசுவை வெளிப்படுத்த வேண்டும். விருத்திபத்ரம் என்ற கத்தியை இக்காரியத்தில் உபயோகிக்கலாகாது. "யத்யத் வாயுவசாதங்கம் ஸஜ்ஜேத் கர்பஸ்ய கண்டச: | தத்தச் சித்வா ஹரேத் ஸம்யக் ரக்ஷேத் நாரீம்சயத்னத:" இதன் பொருள்—வயிற்றிலிருந்து சரியான முறையில் வெளிப்படாமல் சிசுவின் எந்தெந்த அங்கம் கோணலாகப் பட்டுக்கொள்ளுகிறதோ அந்தந்த அங்கத்தைத் துண்டித்து சிசுவை வெளிப்படுத்த வேண்டும். தாயாரைக் கவனமாக ரக்ஷிக்கவேண்டும். இது போன்ற பல சஸ்திரசிகித்சைகள் பிரசூதிதந்திரத்தில் காணப்படுகின்றன. ஆனால் இவை பழக்கத்தில் மறைந்துவிட்டன. ஆகவே Midwifery பாகத்தை ஆங்கில ஸஹாயத்தால் தெரிந்து கொள்வது சுலபமென அதையும் பாடமுறைகளில் சேர்க்க வேண்டுமென்று கமிட்டி செய்துள்ள சிபார்சும் பொருத்தமுள்ளதே. சுதேச முறைகளை முக்கியமாகவும் அவை

களுக்கு உபகாரமாக ஆங்கிலக் கொள்கைகளையும் போதிப்பது இப்பாடசாலையின் நோக்கமாக விருந்தால் இதில் முரண்பாடும் இராது. சுதேச வைத்தியப் பாடசாலை என்ற பெயரிலும் குற்ற மிராது. இதையே பொதுமக்களும் விரும்புகின்றனர். சுதேச வைத்தியத்தை அபிவிருத்திக்குக் கொண்டு வருவதற்கும் இது ஒன்றே சிறந்த வழியுமாம். இது ஈடேற வேண்டுமாகில் மாணாக்கர் களுக்கு சுதேச பாஷையில் பூர்ண பரிசயமும் ஆங்கிலத்தில் ஓரளவு கியானமும் அவசியமாகும். ஆங்கில கியானத்தை மாத்திரம் பிரதானமாகக் கொண்டு சுதேச பாஷை கியானத்தைப்புறக்கணிப் பது தற்கொலைக்கொப்பாகும். மாணாக்கர்கள் சுதேச முறைகளை யொட்டியே பயிற்சி பெற்றால் பிறகு அவர்கள் வெளி வந்து நடத்தும் வைத்தியத் தொழிலிலும் சுதேசியே தலை தூக்கி நிற்கும். ஆங்கில நூல்களை யொட்டி பயிற்சி யளிக்கப்பட்டால் பிறகு தொழிலிலும் விதேசி மருந்துகளே பிரதானமாக இருக்கும். இந்த விபரீதத்தையே தக்காலம்நாம் பிரத்யக்ஷத்தில்காணுகின்றோம். இவர்களுடைய பரிசீலனைகளும் பயிற்சிகளும் பூரா சுதேசியாவதற் குரிய பயிற்சியே பாடசாலையில் அளிக்கப்படவேண்டும். சென்னை யூனிவர்சிடியில் சிரோமணி பரீக்ஷைக்கு வைக்கப்பட்டுள்ள பாட புஸ்தகங்களே இப்பாடசாலையிலும் நிறுவப்படவேண்டும். ஷை பாடசாலையில் இவ்வளவு காலம் படித்து வெளி வந்த நிபுணர்களைக் கொண்டு சர்ஜரி, பிரசூதிதந்திரம், முதலியவை போதிக்கப்பட வேண்டும். Practice of Medicine போன்றவைகளில் ஆங்கில சம்பந்தமே கூடாது. இதை முக்கியமாகக் கொண்டு இப்பாட சாலையை சீர்திருத்தி யமைத்தால் தான் அது சுதேசி பாடசாலை யாகும். காலக்கிரமத்தில் அபிவிருத்திக்கும் வழியுண்டாகும். ஆகவே அடியில் கண்ட விஷயங்கள் முக்கியமாக கவனிக்கப்பட வேண்டும். (1) மாணாக்கர்களுக்கு சுதேச பாஷையில் நல்ல பரிசயம் இருக்கவேண்டும். (2) சென்னை யூனிவர்சிடியில் ஆயுர்வேத சிரோ மணி பரீக்ஷைக்குரிய பாடபுத்தகங்களையே பின் பற்றவேண்டும். (3) Surgery, Midwifery, இவைகளில் ஆங்கிலத்தை யொட்டி சிறிய பாடபுஸ்தகங்களும் சேர்க்கப்படவேண்டும். (பத்திராதிபர்)

தோலா ஒன்று பொடி செய்து போட்டு கிருதபதமாகக் காய்ச்சி முன்போல குழந்தைகளுக்குக் கொடுத்துவர ஸகல கணைகளும் விலகும்.

20. அஷ்டமங்களகிருதம்—பசுநெய் சின்னப்படி ஒன்று, ஜலம் சின்னப்படி நான்கு, இவைகளைச் சேர்த்து அதில் வசம்பு, கோஷ்டம், பிரம்மி, வெள்ளைக்கடுகு, நன்னாரி, இந்துப்பு, திப்பிலி, இவை வகைக்குத் தோலா $2\frac{1}{4}$ பொடி செய்து போட்டு கிருதபத மாகக் காய்ச்சி முன்போல கொடுத்துவர குழந்தைகளின் சகல கணைகளும் நிவர்த்தியாகும்.

21. சிவாமோதகம்—கடுக்காய், கீழாநெல்லி, (இதை கீழ்வாய் நெல்லி என்பர்) மருள், சதகுப்பை, மஞ்சள், மரமஞ்சள், பூனைக்காலி குருந்தொட்டி, பில்வவேர், கிராம்பு, தண்ணீர்விட்டான், சதகுப்பை, சடாமாஞ்சி, நிலப்பூசனிக்கிழங்கு, சுக்கு, நன்னாரி, நெல்லிவற்றல், விருத்ததாரகம், சிறுதேக்கு, திப்பிலி, யானைத்திப்பிலி, சதுர்ஜாதம், வெந்தயம், ஜீரகம், கருஞ்ஜீரகம், ஓமம், செஞ்சந்தனம், வெள்ளைச் சந்தனம், நிலப்பனைக்கிழங்கு, அமுக்கரா, சிறுநெரிஞ்சிமுள், இவைகளைச் சமயிடையாக எடுத்து இடித்து வஸ்திரகாயம் செய்து மொத்தப் பொடிக்குச் சமயிடை விதை நீக்கின திராக்ஷை சேர்த்து திராக்ஷைக்குச் சமயிடை ஜீனியும்சேர்த்து நன்றாக அரைத்துதேன் விட்டு கெட்டியாகப் பிசைந்து கொண்டு அரைச்சுண்டைக்காயளவு மாத்திரைகளாக உருட்டி பத்திரப்படுத்தி ஒரு மாத்திரையைப் பால் அல்லது வென்னீரில் கலக்கிக் கொடுக்க சிசுக்களுக்குக் காணும் காய்ச்சல், இருமல், முதலிய சகல நோய்களும் விலகும்.

22. அசுவகந்தாரிஷ்டம்—அமுக்கரா தோலா 200, நிலப் பனைக்கிழங்கு தோலா 80, மஞ்சிஷ்டி, கடுக்காய், மஞ்சள், மர மஞ்சள், அதிமதுரம், அரத்தை, மொதக்கன்கிழங்கு, மருதம் பட்டை, கோரைக்கிழங்கு, சிவதை, வகைக்குத் தோலா 40, நன்னாரி, விருத்ததாரகம், வெள்ளைச்சந்தனம், செஞ்சந்தனம், வசம்பு, கொடு வேலி, வகைக்குத்தோலா 32, இவைகளை இடித்து ஓர் பானையில் போட்டு ஜலம் சின்னப்படி 256 விட்டு சின்னப்படி 32 ஆக வற்ற

வைத்துக் கஷாயம் செய்து வடிகட்டி அக்கஷாயத்தை ஓர் நெய் பாண்டத்திலிட்டு காட்டாத்திப்பூ தோலா 64, தேன் தோலா 800, திரிகடு மொத்தம் தோலா 8, திரிஜாதகம் மொத்தம் தோலா 16, ஞாழல் தோலா 16, சிறுநாகப்பூ தோலா 8, இவைகளில் தேன் நீங்கலாக மற்றவைகளை இடித்துப் பொடிசெய்து போட்டு தேனையும் சேர்த்து பானையின் வாயை மூடி ஒரு மாதம் வைத்திருந்து பிறகு வடிகட்டிக் கொள்ளவும். வேளைக்கு ஒரு அவுன்சு உபயோகிக்கவும். தலைசுற்றல், கிறுகிறுப்பு, மயக்கம், முதலிய மூளையைப்பற்றிய நோய்கள் விலகும். நரம்புகளுக்கு உறுதியுண்டாகும்.

23. *திராக்ஷாரிஷ்டம்*—திராக்ஷை தோலா 200, ஓர் பாண்டத்திலிட்டு ஜலம் சின்னப்படி 64 சேர்த்து சின்னப்படி 16 ஆக வற்றவைத்துக் கஷாயம் செய்து வடிகட்டி அந்தக் கஷாயத்தை ஓர் நெய் வைத்துப் பழகின பாண்டத்திலிட்டு அதில் நாட்டுச்சர்க்கரை தோலா 400 சேர்த்து சதுர்ஜாதம், ஞாழல், மிளகு, திப்பிலி, வாய்விளங்கம், இவை வகைக்குத் தோலா 4 இடித்துச் சூர்ணம் செய்து சேர்த்துப் பானையின் வாய் மூடி. ஒரு மாதம் வைத்திருந்து பிறகு வடிகட்டி எடுத்து வேளைக்கு ஒரு அவுன்சு வீதம் சாப்பிட்டு வர இருமல் நீங்கும். மல சுத்தியாகும். பலம் உண்டாகும்.

24. *திராக்ஷாஸவம்*—திராக்ஷை தோலா 400ல் ஜலம் சின்னப்படி 128 சேர்த்து சின்னப்படி 32 ஆகும்படி வற்றவைத்துக் கஷாயம் செய்து வடிகட்டி அதில் தேன் தோலா 400, கல்கண்டு தோலா 400 சேர்த்து அதில் காட்டாத்திப்பூ தோலா 64, வால்மிளகு கிராம்பு, ஜாதிக்காய், மிளகு, சதுர்ஜாதம், திப்பிலி, கொடுவேலி, செவ்வியம், தேசாவரம், அரேணுகம், இவை வகைக்குத் தோலா 4 பொடிசெய்து சேர்த்து சந்தனப்பொடி, அகில்கட்டைப்பொடி, இவைகளின் புகையை யூட்டின ஓர் நெய் வைத்துப் பழகின பாண்டத்தில் சேர்த்து பாண்டத்தின் வாயை மூடி ஒரு மாதம் வைத்திருந்து பிறகு வடிகட்டி பத்திரப்படுத்தி வேளைக்கு ஒரு அவுன்சு வீதம் உபயோகித்து வர அக்னிபலம் உண்டாகும். காசம் முதலிய நோய் விலகும்.

2/10/98

25. *யோகராஜகுக்கலு*—சுக்கு, தேசாவரம், திப்பிலி, செவ்வியம், கொடுவேலி, பெருங்காயம், ஓமம், கடுகு, ஜீரகம், கருஞ்ஜீரகம், அரேணுகம், வெப்பாலையரிசி, மலைதாங்கி, வாய்விளங்கம், யானைத்திப்பிலி, கடுகுரோகிணி, அதிவிடயம், சிறுதேக்கு, வசம்பு, மருள்கிழங்கு, வகைக்குத்தோலா ஒன்று, திரிபலை வகைக்குத் தோலா $13\frac{1}{4}$ குக்கில் தோலா 60, இவைகளைப் பொடி செய்து கொண்டு ஓர் இரும்பு சட்டியில் கொஞ்சம் ஜலம் விட்டு அடுப்பேற்றி குக்கிலை மாத்திரம் முதலில் போட்டு அது நன்றாகக் கரைந்து ஜலத்துடன் சேர்ந்து கொதிக்கும்பொழுது அடுப்பை விட்டு இறக்கி முன் சொன்ன பொடிகளையும் வெள்வங்கபஸ்மம், வெள்ளிபஸ்மம், கருவங்கபஸ்மம், அயச்சிந்தூரம், அப்பிரகச்சிந்தூரம், மண்டூரம், ரஸபஸ்மம், இவை வகைக்குத் தோலா 16 சேர்த்துப் போட்டு நன்றாகக்கிளறி சுண்டைக்காயளவு உருட்டி வெய்யிலில் காயவைத்து பத்திரப்படுத்தவும். வேளைக்கு ஒரு மாத்திரை வீதம் தகுந்த அனுபானங்களில் சாப்பிட சகல வாத நோய்களும் போம். பின்னும் குஷ்டநோய்கள், மூலநோய், கிரகணி, பிரமேகம், வாதரக்தம், பவுந்தரம், குன்மம், இவை போம். ராஸ்நாதி கஷாயத்தை அனுபானமாகக் கொள்ள பற்பல வாதநோய்களும் மரமஞ்சள் கஷாயத்தால் பிரமேகங்களும் திரிபலை கஷாயத்தால் கண் நோய்களும் வேம்பு கஷாயத்தால் குஷ்டங்களும் புநர்நவாதி கஷாயத்தால் எல்லா உதர நோய்களும் போம். செய்முறை—சுக்கு முதலிய இருபது கடைச்சரக்குகளைத் தனியாக இடித்து வஸ்திரகாயம் செய்து கொள்ளவேண்டும். அந்தப் பொடியுடன் ஏழு பஸ்மங்களையும் சேர்த்து நன்றாகக்கலந்து விடவும் குக்கலுவைக் கல் மண் இலையில்லாமல் சுத்திசெய்து கொண்டு அதை நன்றாக இடித்து ஜலத்தில் போட்டு முதலில் கொதிக்க வைத்தால் நன்றாகக் கரைந்துவிடும். பிறகு வெல்லப்பாகு கொதிப்பதுபோல கொதிவரும். அந்த சமயத்தில் முன்சொன்ன பொடிகளைத் தூவிக்கிளறி குளிகை உருட்டும் பதத்தில் எடுத்து அளவுப்படி குளிகை உருட்டி வெய்யிலில் காயவைத்துக் கொள்ளவும். சித்தர் முறை என்ற புஸ்தகத்தில் சொல்லி[illegible]கா

வது ஓர் முறையில் ரஸபஸ்மத்தைத் தயாரித்துக் கொள்ளவேண்டும். பெருங்காயம் வெள்ளைக்காயமாக வாங்கவேண்டும். கருப்புகாயம் மருந்து முறைகளுக்குப் பிரயோசனமற்றது. உசிதப்படி எடுத்து நெய்யில் பொரித்துக் கொள்ளவேண்டும். பொரித்த பிறகு அளவுப் படி எடுத்துக் கொள்ளவும். இம்மருந்து மிகவும் உயர்ந்தது. குக்கிலைச் சுத்திசெய்வது நல்லது. அதைச் சுத்தி செய்யும் விதம்—கல் மண் இன்றி எடுத்து நன்றாக இடித்து திரிபலை கஷாயத்தால் பாவனை செய்து உலர்த்திக்கொள்ள வேண்டும். எழு பாவனை செய்வது மிகவும் உத்தமம். ஒரு பாவனையாவது செய்து எடுத்துக் கொள்ளுவது நல்லது.

26. தசமூலாரிஷ்டம்—தசமூலம் வகைக்குத் தோலா 20, கொடுவேலி, பௌஷ்கரம், வகைக்குத் தோலா 100, லோத்திப் பட்டை, சீந்தில், வகைக்குத் தோலா 80, நெல்லிவற்றல் தோலா 64, சிறுகாஞ்சொரிவேர் தோலா 48, கருங்காலி, வேங்கை, கடுக்காய், வகைக்குத் தோலா 32, கோஷ்டம், மஞ்சிஷ்டி, தேவதாரு, வாய் விளங்கம், அதிமதுரம், சிறுதேக்கு, விளாவேர், தான்றிக்காய், வெள்ளைச்சாரணத்தி, செவ்வியம், சடாமாஞ்சி, ஞாழல், நன்னாரி, கருஞ்ஜீரகம், சிவதை, அரேணுகம், அரத்தை, திப்பிலி, பாக்கு, பூலாங்கிழங்கு, மஞ்சள், சதகுப்பை, பத்மகாஷ்டம், சிறுநாகப்பூ, கோரைக்கிழங்கு, வெப்பாலையரிசி, கர்காடகச்சிருங்கி, ஜீவகம், ரிஷபகம், மேதா, மகாமேதா, காகோலீ, க்ஷீரகாகோலீ, ரித்தி, விருத்தி, இவை வகைக்குத் தோலா 8, இவைகளை இடித்து ஓர் பானையில் போட்டு ஜலம் சின்னப்படி 131 விட்டு 33 படி ஆக வற்ற வைத்துக் கஷாயம் செய்து வடிகட்டி அக்கஷாயத்தை ஓர் பானையில் வைத்து திராக்ஷை தோலா 256 எடுத்து ஓர் பானையில் போட்டு ஜலம் சின்னப்படி 16 விட்டு நான்கு படியாக வற்றவைத்துக் கஷாயம் செய்து வடிகட்டி அக்கஷாயத்தையும் முன் பானையில் உள்ள கஷாயத்துடன் சேர்த்து தேன் சின்னப்படி இரண்டு, நாட்டுச் சர்க்கரை தோலா 1600 இவைகளையும் சேர்த்துக் கலக்கி அதில் காட்டாத்திப்பூ தோலா 120, வால்மிளகு, விலாமிச்சவேர், சந்தனம்,

ஜாதிக்காய், கிராம்பு, சதுர்ஜாதம், திப்பிலி, இவை வகைக்குத் தோலா 8 இடித்துப் பொடி செய்து சேர்த்து கஸ்தூரி கால் தோலா வும் அரைத்துச் சேர்த்து பானையின் வாயை நன்றாக மூடி பூமியில் ஒரு மாதம் புதைத்து வைத்திருந்து பிறகு எடுத்து வடிகட்டி பத்திரப்படுத்தவும். வேளைக்கு ஒரு அவுன்சு உபயோகிக்கவும். இது ஓர் அருமையான டானிக். பல நோய்கள் விலகும். குறிப்பு—கஷாயச்சரக்கு மொத்தம் 54. திராக்ஷையுடன் சேர்ந்து மொத்தம் 55 ஆகின்றன. சூர்ணசரக்குகள் மொத்தம் 11. கஸ்தூரியுடன் சேர்ந்து மொத்தம் 12 ஆகின்றன.

27. காங்காயநகுடிகா—பூலாங்கிழங்கு, புஷ்கரமூலம், (கடையில் கிடைக்கும் சாதாரண கோஷ்டம்) தந்தீ, கொடுவேலி, துவரை, சுக்கு, வசம்பு, சிவதை, இவை வகைக்குத் தோலா நான்கு, பெருங் காயம் தோலா 12, யவக்ஷாரம், புளிவஞ்சி, வகைக்குத் தோலா எட்டு, ஓமம், ஜீரகம், மிளகு, மல்லிவிதை, வகைக்குத் தோலா ஒன்று, கருஞ்ஜீரகம், ஓமம், வகைக்குத் தோலா இரண்டு, இவைகளை இடித்து வஸ்திரகாயம் செய்து கொம்மட்டி மாதளை ரசத்தால் பிசைந்து இலந்தைக் கொட்டையளவு மாத்திரைகள் உருட்டி வெய்யிலில் காயவைத்துப் பத்திரப்படுத்தவும். வேளைக்கு ஒன்று அல்லது இரண்டு மாத்திரைகள் உபயோகிக்கலாம். குன்மம் நீங்கும். குறிப்பு—துவரையில் வேரை எடுப்பது நியாயமெனத் தோன்றுகிறது. ஆனால் துவரைப்பருப்பை எடுத்துக் கொள்ளும் படி உரையில் ஒருவர் எழுதுகிறார். நாமும் பருப்பைத்தான் உப யோகித்து வருகிறோம்.

28. குடஜலேஹம்—வெப்பாலைப்பட்டை தோலா 400 எடுத்து இடித்து ஓர் பானையில் போட்டு ஜலம் சின்னப்படி 32 விட்டு 8 படியாக வற்றவைத்துக் கஷாயம் செய்து வடிகட்டி அதை ஓர் இரும்பு பாத்திரத்தில் விட்டு அடுப்பேற்றி வற்றவைத்து நன்றாக லேகியம் போலாகும் சமயத்தில் சௌவர்சலவணம், யவக்ஷாரம், பிடாலவணம், இந்துப்பு, திப்பிலி, காட்டாத்திப்பூ, வெப்பாலையரிசி, ஜீரகம், இவை வகைக்குத் தோலா ஒன்று பொடி செய்து போட்டு

கிளறி எடுத்து வைத்துக்கொள்ளவும். வேளைக்கு கால் தோலாயிடை எடுத்துத் தேனில் குழைத்துச் சாப்பிட அதிசாரம், கிரஹணி, விலகும். அக்னி பலம் உண்டாகும்.

29. குடஜாஷ்டகம்—பச்சையான வெப்பாலைப்பட்டை தோலா 400 எடுத்து இடித்து ஜலம் சின்னப்படி 32 விட்டு எட்டு படியாக வற்றவைத்து வடிகட்டி அந்த கஷாயத்தை ஓர் இரும்பு சட்டியில் விட்டு அடுப்பேற்றி சிறுதீயிட்டு இளம்பாகு பதம் போன்ற பதத்தில் இலவம்பிசின், பாடக்கிழங்கு, தொட்டாச்சுருங்கி, அதிவிடயம் கோரைக்கிழங்கு, பில்வப்பழச்சதை, காட்டாத்திப்பூ, இவை வகைக்குத் தோலா நான்கு பொடி செய்து போட்டு நன்றாகக் கிளறி அதில் கால் தோலாயிடை மருந்தை அதிசாரத்தில் குளிர்ந்த ஜலத்துடனும் ரக்தக்கடுப்பில் ஆட்டுப்பாலுடனும் (அனுபானமாக) சாப்பிட ஷை ரோகங்கள் தீரும். குறிப்பு—முன் சொன்ன இரண்டு மருந்துகளில் நெய், தேன், சேராமலிருப்பதால் மருந்து அதிக நாள் வைத்திருந்தால் கெட்டுப்போகும். ஆகவே குறைந்த அளவில் தயாரித்துக் கொள்ளவேண்டும்.

30. காமதேவகிருதம்—சமுக்கரா தோலா 400, சிறுநெருஞ்சி முள் தோலா 200, தண்ணீர்விட்டான், நிலப்பூசனிக்கிழங்கு, ஓரிலை குருந்தொட்டி, அரசம்மொக்குகள், தாமரைவிதை, வெள்ளைச் சாரணத்தி, நிலக்குமிழம்பழம், உளுந்து, வகைக்கு தோலா 40, இவைகளை இடித்து ஓர் பானையில் போட்டு ஜலம் சின்னப்படி 128 விட்டு சின்னப்படி 32 ஆக வற்றவைத்துக் கஷாயம் செய்து வடிகட்டி அதில் பசுநெய் சின்னப்படி 2, பசும்பால் சின்னப்படி 8, கரும்புச்சார் சின்னப்படி 8, சேர்த்து அதில் திராக்ஷை, பத்மகாஷ்டம், கோஷ்டம், திப்பிலி, செஞ்சந்தனம், விலாமிச்சவேர், சிறுநாகப்பூ, பூனைக்காலிவிதை, கருநெய்தல்கிழங்கு, நன்னாரி, மாகாளி, ஜீவனீயகணம், இவை வகைக்குத் தோலா ஒன்று இடித்துப் பொடிசெய்து கல்கமாகப் போட்டு சர்க்கரை தோலா 8 சேர்த்து அடுப்பேற்றி கிருதபதமாகக் காய்ச்சி வடித்து பத்திரப்படுத்தி தினம் காலையில் அரை அவுன்சு முதல் ஒரு அவுன்சு

[library stamp]

வரையில் உபயோகிக்க ரக்தபித்தம், காமாலை, பாண்டு, க்ஷயம், முதலிய பல நோய்கள் நீங்கும். தாது விருத்தியுண்டாகும்.

31. ரஸாப்ரமண்டூரம்—கந்தகம், அப்பிரகச்சிந்தூரம், ரஸம், வகைக்குத் தோலா 2, மண்டூரம் தோலா 8, கடுக்காய்த்தூள் தோலா 8 கல்மதம் தோலாஒன்று, காந்தசிந்தூரம் தோலா அரை, இவைகளை ஒன்று சேர்த்து கரிப்பான் ரஸம், உருத்தலை கரிப்பான் ரஸம்; நொச்சிரஸம், மாணக்கிழங்கு ரஸம், இஞ்சிச்சார், இவைகளில் முறையே பாவனை செய்து பிறகு திரிகடு, திரிபலை, செவ்வியம், கோரைக்கிழங்கு, வகைக்குத் தோலா ஒன்று இடித்துப் பொடி செய்து அதில் கலந்து அந்த சூர்ணத்தில் கால் தோலா அளவு தேன் நெய் அனுபானத்தில் கொள்ள வீக்கம், சோகை, காமாலை, பாண்டு, நீங்கும்.

32. வஸந்தகுசுமாகரம்—பவழம், ரஸபஸ்மம், முத்துபஸ்மம், அப்பிரகச்சிந்தூரம், வகைக்குத் தோலா 4, தங்கசிந்தூரம், வெள்ளி பஸ்மம், வகைக்குத் தோலா 2, அயச்சிந்தூரம், கருவங்கசிந்தூரம், வெள்ளங்கபஸ்மம், வகைக்குத் தோலா 3, இவைகளை ஒன்று சேர்த்து அதை ஆடாதோடை கஷாயம், மஞ்சள் ரஸம், கரும்புச் சார், தாமரைக்கிழங்கு கஷாயம், முல்லைபுஷ்ப கஷாயம், பால், வாழைக்கிழங்கு ரஸம், சந்தனகஷாயம், கஸ்தூரிநீர், இவைகளால் முறையே பாவனை செய்து பிறகு இரண்டு குன்றுமணி அளவுள்ள மாத்திரைகளாக உருட்டி வெய்யிலில் உலர்த்தி பத்திரப்படுத்தி வேளைக்கு ஒரு மாத்திரை வீதம் தினம் இரண்டு வேளை உபயோகிக்க மதுமேஹம், இருபது பிரமேஹங்கள், மூத்திரத்தைப் பற்றிய நோய்கள், ஸ்திரீகளுக்கு மாதவிடாய் காலங்களில் காணும் நோய்கள் முதலியன நீங்கும். இது ஓர் கல்ப முறையில் சேர்ந்தது. குறிப்பு—இம்மருந்தைப் பலரும் அறிவார்கள். ஆயுர்வேதத்தில் உள்ள மருந்துகளில் இதுவே முதன்மையானது. இது சிறந்த டானிக்குமாகும். மதுமேஹ நோய்களை உறுதியான ரீதியில் கண்டிக்கும். தகுந்த அனுபானங்களுடன் சாப்பிட ஸகல நோய்களிலும் மிகுந்த நன்மையை யுண்டுபண்ணும். ரஸத்தை ஏதாவது

210198

ஓர் முறையில் பஸ்மம் செய்து கொள்ளவேண்டும். அயச்சிந்தூரத்திற்குப் பதிலாக காந்தசிந்தூரம் சில நூல்களில் காணப்படுகின்றது. காந்தசிந்தூரமும் நூறு புடம் போட்டதாக இருக்கவேண்டும். காந்தசிந்தூரம் சேர்ப்பது தான் நமது வழக்கம். தீராத நோய்களெனக் கருதப்படும் எந்த நோய்க்கும் இதை உபயோகிக்கலாம் பாவனையை முறையே செய்யவேண்டும். ஒன்பது பாவனைகள் மொத்தம் சொல்லப்பட்டிருக்கின்றன.

33. கோரோசனை எண்ணெ—கோரோசனை, கஸ்தூரி, வசம்பு, சுக்கு, வெந்தயம், மாச்சக்காய், வெள்ளைப்பூண்டு, கடுகுரோகிணி, கோஷ்டம், அதிமதுரம், திப்பிலி, ஜீரகம், ஏலம், சந்தனம், தேவதாரு, மூங்கில்தோல், ஆகிய இவை வகைக்கு வராகனிடை ஒன்று இடித்துப் பொடிசெய்து சங்கங்குப்பி சாற்றில் கலக்கி சின்னப்படி ஒரு படி விளக்கெண்ணெயில் கலந்து மெழுகு பதமாகக்காய்ச்சி வடிகட்டி அந்த எண்ணெயில் வயதுக்குத் தக்கபடி கொடுக்க குழந்தைகளின் மாந்தம் விலகும். தவிர வயிற்றுப்பிசம், சுழி மாந்தம், குளிர், காய்ச்சல், முதலியவை போம்.

34. மாந்த எண்ணெ—விளக்கெண்ணெ, தகரைச்சார், வகைக்குச்சின்னப்படி ஒன்று எடுத்து அதில் கருஞ்சீரகம், கடுகுரோகிணி, வெந்தயம், வகைக்குத் தோலா 3, உள்ளிப்பூண்டு தோலா 6, வாய்விளங்கம், ஓமம், கஸ்தூரி மஞ்சள், வசம்பு, வகைக்குத் தோலா 2, இவைகளில் உள்ளிப்பூண்டு நீங்கலாக மற்றவைகளை இடித்துப் பொடிசெய்து போட்டு உள்ளிப்பூண்டை ஜலம் விடாமல் அரைத்துச் சேர்த்து அதில் கொழுஞ்சிவேர், நாய்வேளைவேர், மூக்கரைச்சாரணைவேர், நாயுருவிவேர், தைவேளைவேர், இவைகளைப் பச்சையாகத் தனித்தனியாக ஜலம் விட்டரைத்து எலுமிச்சங்காயளவு தனித்தனி எடுத்துச் சேர்த்துக் கலக்கி மெழுகு பதமாகக் காய்ச்சி வடித்து வயதிற்குத் தக்கபடி அளவுடன் கொடுக்க குழந்தைகளின் மாந்தங்கள் சகலமும் நீங்கும். குறிப்பு—இந்த இரண்டு முறைகளிலும் பாதியளவு விளக்கெண்ணெயும் பாதியளவு வேப்பெண்ணெயும் சேர்த்துக் காய்ச்சி உபயோகிப்பது சிலர் வழக்கம்.

திருச்சி ஆயுர்வேத ஸபா.

மேற்படி ஸபாவின் மாதாந்தரக் கூட்டம் 30—6—41௳ மாலை 4-30 மணிக்கு திருச்சி ஆயுர்வேதிக் யூனியன் கட்டிடத்தில் நடைபெற்றது. ஸ்ரீரங்கம் Dr. V. சுப்ரமண்ய அய்யர் தலைமை வஹித்தார். திருச்சி Dr. S. N. ஸிம்மம் அவர்கள் "மூலம் பவுத்ரம்" என்னும் விஷயத்தையும் அதன் சிகித்ஸையைப் பற்றியும் விரிவாக தமிழில் உபன்யாஸம் எழுதிப்படித்தார். ஸபா மெம்பர்கள் எல்லோரும் ஆஜராகியிருந்தனர். உபன்யாஸ முடிவில் சர்ச்சைகள் நடந்தன. மாலை 6-30 மணிக்கு கூட்டம் இனிது முடிவுற்றது.

இப்படிக்கு,

V. R. சுப்ரமண்ய அய்யர்.

காரியதரிசி.

மதுரை சுதேச வைத்திய ஸபை.

மேற்படி ஸபையின் ஆதரவில் காளது 1941௵ ஜூலை 20௳ ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு காக்காத்தோப்புத்தெரு 62 நிர். T. I. C. கார்ப்பரேஷன்கட்டிடத்தில் ஸ்ரீ N. R. கிருஷ்ணசாமி அய்யங்கார் B. A., B. L. அவர்கள் தலைமையில் சுதேச வைத்யர்களின் பொதுக்கூட்டம்' நடைபெற்றது. அச்சமயம் திருவனந்தபுரம் வைத்ய சாஸ்திரி ஸ்ரீ V. K. கோவிந்தன் வைத்தியர் "ஜ்வரரோக நிதானம்" என்ற விஷயத்தைப்பற்றி உபன்யசித்தார்கள். தலைவரின் விரிவான முடிவுரையுடன் கூட்டம் இனிது நடைபெற்றது.

காரியதரிசி.